பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 06 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நாடு விரைவாக முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆபரேஷன் சிந்துார் குறித்து மக்களவை உறுப்பினர் திரு. சஷிதரூர் தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவினர் வாஷிங்டனில் அமெரிக்க அரசு அதிகாரிகளை சந்தித்து விளக்கம் அளித்தனர்.

3. பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது.

4. தட்கல் ரயில் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்வதற்கு மின்னணு ஆதார் அங்கீகார முறை விரைவில் பயன்படுத்தப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

5. இந்தோனேஷியா ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நாடு விரைவாக முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ராஜஸ்தானின் உள்ள Menar மற்றும் Khichan ஆகிய இரண்டு ஈர நிலங்கள், ராம்சார் பகுதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் பங்கேற்புடன் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லியில் உள்ள பகவான் மகாவீர் வனஸ்தலி பூங்காவில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொள்கிறார்.

அப்போது ‘அன்னையின் பெயரில் ஒரு மரக்கன்று’ நடும் திட்டத்தின்கீழ் பிரதமர், ஆலமரக் கன்றை நடவுள்ளார்.

இது 700 கிலோ மீட்டர் ஆரவல்லி பகுதியை மீண்டும் வனப்பகுதியாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

தில்லி, ராஜஸ்தான், ஹரியானா, குஜராத் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 29 மாவட்டங்களைக் கொண்ட ஆரவல்லி குன்று பகுதியில் 5 கிலோ மீட்டர் பரப்பளவை பசுமையாக்கும் திட்டமாகவும் இது இருக்கும் என்று கூறப்படுகிறது.

தூய்மையான நகர்ப்புற போக்குவரத்தை நோக்கமாகக் கொண்டு 200 மின்சார பேருந்துக சேவையையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

நாளை ஜம்மு-கஷ்மீர் செல்லும் பிரதமர் கத்ராவில் 46 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலனா பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி முடிவடைந்த திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் குறித்து காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் திரு. சஷிதரூர் தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவினர் வாஷிங்டனில் அமெரிக்க அரசு அதிகாரிகள் மற்றும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து விளக்கம் அளித்தனர்.

இந்தியா எதிர்கொண்டு வரும் எல்லைதாண்டிய பயங்கரவாதம், அதற்கு எதிரான நடவடிக்கை குறித்து அவர்கள் எடுத்துரைத்தனர்.

அப்போது பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த அமெரிக்க தரப்பினர் பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதாக குறிப்பிட்டனர்.

துப்பாக்கி முனையில் செயல்படுவோருடன் இந்தியா பேச்சு நடத்தாது என்று திரு. சஷிதரூர் அப்போது கூறினார்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கோப்பையை வென்ற பெங்களூரு அணியினருக்காக நடைபெற்ற வெற்றிப் பேரணியின்போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது. 33 பேர் காயமடைந்துள்ளனர்.

விதான் சௌதாவில் இருந்து சின்னசாமி மைதானம் வரை சென்ற வெற்றிப் பேரணியின்போது இந்த கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் சுமார் 35 ஆயிரம் பேர் கூடுவதற்கு இடமுள்ள சின்னசாமி மைதானத்தில் எதிர்பாராதவிதமாக சுமார் 3 லட்சம் பேர் கூடியதால் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்ததாக கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு சார்பில் தலா 10 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் சிகிச்சைக்கான செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாவும் திரு. சித்தராமையா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

<<<<>>>>

இயற்கைக்கு எதிரான பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக எளிதில் மட்கக்கூடிய மாற்றுப்பொருட்களை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசின் நீர்வளத் திட்டத்தின் நாமக்கல் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. கே.வி. அஜித் தெரிவித்துள்ளர்.

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வளத் திட்டம் குறித்து ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

நாட்டில் மொத்தம் 148 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் 12 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாநகராட்சி அலுவலர்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்கும்பட்சத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அது செம்மைப்படுத்தப்பட்டு இயற்கை மாசுபாடு ஏற்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவதாக அவர் கூறினார்.

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை முற்றிலுமாக தடுக்கும்போது நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்றும் திரு. கே.வி. அஜித் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தட்கல் ரயில் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்வதற்கு மின்னணு ஆதார் அங்கீகார முறை விரைவில் பயன்படுத்தப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், முறையான பயணிகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட பயணச்சீட்டுகள் கிடைப்பதற்கு இந்நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

(Sound Byte – Music – 12 Sec)

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற பரம்வீர் நாயக் ஜதுநாத் சிங் குறித்த வீரதீர சாதனைகள்...

(Voice Over / Closing Music – 114 Sec)

<<<<>>>>

சிக்கிமின் வடக்குப் பகுதியில் வெள்ளப்பெருக்கில் சிக்கியுள்ள சுற்றுலாப் பயணிகளை மீட்கும் பணியில் அம்மாநில அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

மங்கன் மாவட்டத்தில் நிலவும் வெள்ள சூழ்நிலை குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமங், அதிகாரிகளுடன் விவாதித்தார்.

Pakyong பசுமை விமான நிலையத்தில் இருந்து இயக்கப்பட்ட 2 ஹெலிகாப்டர்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளை மீட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீட்புக் குழுவினரின் நடவடிக்கையால் Lachen பகுதியில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அடுத்த 7 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், சத்தீஷ்கர் உள்ளிட்ட மாநிலங்களிலும் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு அமைம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தோனேஷியா ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 21-14, 22-20 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் Polina Buhrova – Yevheniia Kantemyr இணையை வென்றது.

------------

CAVA லீக் வாலிபால் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

கஜகஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஈரான் 3-0 என்ற ஆட்டக் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியாவிற்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

------------

செக் குடியரசில் நடைபெற்று வரும் சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - அனிருத் சந்திரசேகர் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, ரோமேனியாவின் Vlad Victor Cornea – போலந்தின் Karol Drzewiecki இணையை 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வென்றது.

-------------

தாய்லாந்தில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான நட்புணர்வு கால்பந்து போட்டியில் தாய்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இதில் திண்டுக்கல் அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

கோயம்புத்தூரில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<The End>>>>